# தூய லூர்து அன்னை ஆலயம்

50இ ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்
frmichaelsitaram@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பால் இயோ
fryeopaul@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்
nithiya@catholic.org.sg

பங்கு அலுவலகம் : ololpastoral@gmail.com
ololsec@gmail.com

**08-10-2017 பொதுக்காலம் 27ம் ஞாயிறு முதல் ஆண்டு**




| ஞாயிறு வாசகங்கள் | |
|---|---|
|  | முதலாம் வாசகம்: எசாயா 5:1-7 |
| | பதிலுரைப்பாடல்: திருப்பாடல் 80:8,11.12-13.14-15.18-19 |
| | பதிலுரை: ஆண்டவரது திராட்சைத் தோட்டம் இஸ்ரயேல் குடும்பத்தாரே. |
| | இரண்டாம் வாசகம்: பிலிப்பியர் 4:6-9 |
| | வாழ்த்தொலி: அல்லேலூயா! அல்லேலூயா! நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். அல்லேலூயா! |
| | நற்செய்தி வாசகம்: மத்தேயு 21:33-43 |

## மனிதாபிமான நிவாரண நிதிக்காக வேண்டுகோள்

வெளிநாட்டு மனிதாபிமான மற்றும் பேரிடர் நிவாரணம் CHARIS என்ற மனிதாபிமான நிவாரண அமைப்பு, தன் வருடாந்திர நிவாரண நிதிக்கான வேண்டுகோளை விடுக்கிறது. அதற்கான உறைகள் உங்கள் பங்கு அலுவலகத்தில் கிடைக்கும். மேலும் நீங்கள் உங்கள் காசோலைகளை "HUMANITARIAN AID FUND" என்று எழுதி, உங்கள் பெயர் மற்றும் தொலைபேசி எண்ணுடன் CHARIS, #07-02, Catholic Centre, 55 Waterloo Street, Singapore 187954 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலும் விபரங்களுக்கு Victoria Lim (63374119) அல்லது info@charis-singapore.orgயைத் தொடர்பு கொள்ளவும். நன்றி.

## சிங்கப்பூர் பேராயரின் அறிக்கை

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே!

பிலிப்பைன்ஸிலுள்ள மாராவியில் நீடித்துக் கொண்டிருக்கும் நெருக்கடி நிலையினால் ஏறத்தாழ 3,60,000 மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்களுக்கு உணவும் தங்க இடமும் தேவை. அவர்களின் பிள்ளைகளுக்கு ஊட்டச்சத்தும் கல்வியும் அவசியம். பாதுகாப்பு தேடியலைந்த 1,03,000கும் மேற்பட்ட ரோஹிங்கா அகதிகள் தாய்லாந்து~மியன்மார் எல்லைப் பகுதியிலுள்ள 9 அகதிகள் முகாம்களில் தற்காலிகமாக அடைக்கலம் அடைந்துள்ளனர். ஈராண்டுகளுக்கு முன் நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுமார் 46,000 வீடுகள் கட்டப்பட்டுள்ளது. அங்கு மேலும் 1,15,000கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கள் வாழ்வையும் வீட்டையும் இன்றும் சீரமைத்துக் கொண்டிருக்கின்றனர். அந்த நிலநடுக்கம் ஏப்ரல் 2015ல் ஏற்பட்டதென்றாலும், அதன் நிவாரணப் பணிகள் பல ஆண்டுகள் நீடிக்கும். மேலும் நம்மைச் சுற்றி நடக்கும் பல மனிதாபிமானப் பேரிடர்களைப் பற்றி நமது ஊடகங்கள் தெரிவிப்பதில்லை. ஆனாலும் மனிதத் துன்பம் கொடிய நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

CHARIS என்ற சிங்கப்பூர் திருச்சபையின் மனிதாபிமான நிவாரண அமைப்பு, அதன் தோழமை நிறுவனங்களுடனும், மற்ற அமைப்புகளுடனும், கத்தோலிக்க சமூகமாகிய உங்களுடனும் இணைந்து கடந்த ஆண்டில் இப்படிப்பட்ட பல்வேறு நிவாரணப் பணிகளுக்குப் பண உதவியும் பொருளுதவியும் செய்து, பல உயிர்களின் மற்றும் சமூகங்களின் கௌரவத்தை மீண்டும் உயிர்ப்பித்துள்ளது.

CHARIS இவ்வாண்டும், பேரிடர் நிவாரணத்திலும், மனிதாபிமானச் சேவைகளிலும் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் தொடங்கப்பட்டுள்ள மனிதாபிமான நிவாரண நிதித் திட்டத்திற்கு உதவ உங்களை அன்புடன் வேண்டுகிறது. உங்கள் அனைவருக்கும் விண்ணப்ப உறை ஒன்று அளிக்கப்படும். சிறந்த உலகை உருவாக்கும் எங்களது எளிய முயற்சியில் உங்கள் பங்களிப்பையும் காட்ட தாராள மனதுடன் உதவுங்கள்.

கிறிஸ்துவ அர்ப்பணிப்பில், உங்கள்,
மேதகு. வில்லியம் கோ
சிங்கப்பூர் பேராயர்

## புனித வின்சென்ட் தே பவுல் சபை

புனித வின்சென்ட் தே பவுல் சபையின் வளர்ச்சிக்காக இம்மாதம் முதல் ஞாயிறு இறைமக்கள் அளித்த காணிக்கை $3,823.85 வெள்ளிகள்.
இம் மாதம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை $5,310.00 வெள்ளிகள். உங்கள் காணிக்கைக்கு மிகவும் நன்றி.

## ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

தேதி : ஞாயிறு, 22-10-2017
நேரம் : மதியம் 2.30மணி

**ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் பிற்பகல் 2.30 மணி முதல் 4.00 மணி வரை மூடப்பட்டிருக்கும்.**

நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்போடு அழைக்கின்றோம்.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு தடவை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மூ | ம் | ட | ரி | இ | தை | த் | ய | த | யூ |
| லை | ட | ஆ | ஸ் | வி | பே | து | ரு | தா | ற |
| க் | து | ர | சு | வி | தா | தி | வை | கா | ந் |
| க | யே | பு | ப் | ய் | வா | த | ந் | தா | ல் |
| ல் | றி | ஸ் | நே | டி | ந் | வா | ழ் | வோ | தி |
| மு | க | ன் | கோ | ர் | டு | றா | ன் | ம | ப |
| ம் | ளு | ரு | ண | பி | மை | கை | ம் | ளை | து |
| கி | க | டு | பா | ப் | றை | மு | யை | த் | ப |
| ளை | ண் | மா | ய | கா | தி | யா | ழி | ட் | ரி |
| க | ந | ற் | செ | ய் | தி | ஒ | கு | க | வு |

1. __________ தழைக்கும் என்று காத்திருந்தார், ஆனால் தழைத்ததோ __________.
2. படைகளின் ஆண்டவரது திராட்சைத் தோட்டம் __________ குடும்பத்தாரே.
3. அவர் ஆர்வத்துடன் நட்ட கன்று __________ மக்களே.
4. இந்தத் திராட்சைக் கொடிமீது __________ காட்டும்!
5. அத்தீயோரை ஈவிரக்கமின்றி __________ விடுவார்.
6. என் வாழ்வில் நீங்கள் __________ யாவற்றையும் கடைப்பிடியுங்கள்.
7. கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு __________ ஆயிற்று.

***********

அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

## பொது விடுமுறை திருப்பலி நேரம்



தேதி : புதன், 18-10-2017

நேரம் : காலை 9:00மணி (ஆங்)

காலை10:00மணி(தமிழ்)

*பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை

*ஆலயத்தின் நுழைவு வாயில் இரும்பு கதவுகள் (Main Gates) தமிழ் திருப்பலி நிறைவுபெற்றவுடன் மூடப்பட்டிருக்கும்.

## ஆலயத் திருப்பலி நேரங்கள்

வார நாட்கள் (ஆங்கிலம்) : மதியம் 12:30 & மாலை 6:30 மணி

முதல் வெள்ளி (ஆங்கிலம்) : மாலை 7:30 மணி

சனி (ஆங்கிலம்) : மாலை 6:00 & 7:30 மணி

ஞாயிறு (ஆங்கிலம்) : காலை 7:30, 11:30 & 1:00 மணி

ஞாயிறு (தமிழ்) : காலை 9:30 & மாலை 6:30 மணி

பொது விடுமுறை(ஆங்கிலம்) : காலை 9:00 மணி

பொது விடுமுறை (தமிழ்) : காலை 10:00 மணி



## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை | : மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை | : மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : வெள்ளி மாலை 6:30 மணி தொடர்ந்து திருப்பலி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை | : வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் | : ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை | : ஞாயிறு மாலை 6:00 மணி |
| | இறைவாழ்வு செபக்குழு வழிபாடு | : ஞாயிறு இரவு 9:00 மணி |
| | லூர்து அன்னை நவநாள் | : முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் | : முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் | : வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் மற்றும் செப வழிபாடு | : சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு | : மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**